**மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதியின் முகாமைச் சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதியின் முகாமைச் சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் தொடர்புடைய தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புகள்)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளமை.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை

தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ''சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியிருக்காமை

| உரிய நியமங்களுடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| முழுமையாக தேய்விடப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் ரூபா 2,781,711 கிரயமான 02 மோட்டார் வாகனங்களின் பயன்படு ஆயட்காலம் தொடர்'பான மதிப்பீடு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் மீள மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 02 வாாகனங்களை மதிப்பீடு செய்யுமாறு விலைமதிப்பீட்டு திணைக்களத்திடம் கோரியிருந்த போதிலும், இதுவரையிலும் வாகன மதிப்பீட்டு பெறுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமானத்தேய்வு செலவினத்தை ரூபா 4,730,174 இனால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஆண்டிற்கான மிகை அந்த அளவினால் அதிகரித்தும் பெறுமானத் தேய்வு ஓதுக்கம் குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் திருத்தப்பட்டு சமர்ப்பிப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமானத் தேய்வு கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும் என்பது. |
| (ஆ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இற்கு முரணாக கட்டிடங்கள் மற்றும் மின் பிறப்பாக்கி இயந்திரங்களின் பழுதுபார்த்தல் | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இற்கு இணங்க 2022 ஆம் ஆண்டின் போது நிலையான | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிலையான சொத்துக்களுக்கு உரியதாக |

| | | |
|---|---|---|
| செலவினங்கள் 08 சந்தர்ப்பங்களில் ரூபா 3,437,897 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக மூலதனமாக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களை சரியாக இனங்காணும் நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு பின்பற்றப்படுகின்றது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | மூலதனமாக்கப்பட வேண்டிய செலவினங்கள் சரியாக இனங்காணப்பட வேண்டியமை. |

### 1.5.4 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| நிலையான சொத்துக்கள் - 2010 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆரம்ப மீதிகள் | 64,311,040 | 2010 ஆம் ஆண்டுக்கு முன்னைய ஆண்டுகளில் நிலையான சொத்துக்களின் தனிப்பட்ட பட்டியல்கள் | 2020 ஆம் ஆண்டின் போது நிலையான சொத்துக்களின் பட்டோலை வழங்கப்பட்டுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டின் போது அது நாளதுவரையாக்கப்பட்டுள்ளது. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் 2010 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆரம்ப மீதிகளாக காண்பிக்கப்பட்டுள்ள கூட்டுப் பெறுமதிகளின் தனிப்பட்ட மீதிள் அந்த சொத்துக்களை சுவீகரித்த ஆண்டுகளின் அடிப்படையில் நாளதுவரையாக்கப்பட்டு காண்பிக்கப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 104(3), 104(4) மற்றும் 1642 | மீளாய்வாண்டின் போது இடம்பெற்றிருந்த வாகன விபத்து தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன், அருகில் அமைந்துள்ள பொலிஸ் நிலையத்தில் அறிவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விசாரணைச் சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பரிந்துரைகளுடனான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2021.12.28 ஆந் திகதி இடம்பெற்ற வாகன விபத்தில் யாருக்கும் விபத்தொன்று ஏற்பட்டிராததால் பொலிஸ் நிலையத்தில் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | வாகன விபத்து எந்த தன்மையை அடிப்படையாக கொண்டிருந்த போதிலும், நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 110(1) | சேதங்கள் தொடர்பான அறிக்கையிடுவதற்காக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களுக்கு ஏற்படும் சேதங்களை அறிக்கையிடுவதற்காக அவ்வாறான பதிவேடொன்றை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக குறிப்பிடுகின்றேன். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | நிதிப் பிரமாணம் 371(2) | 15 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 766,150 ஆன முற்பணங்களை தீர்ப்பனவு செய்யும் போது 31 நாட்கள் முதல் 175 நாட்கள் வரையான தாமதங்கள் ஏற்பட்டிருந்தன. | முற்பண தொகையை தீர்ப்பனவு செய்வது தாமதமாகியுள்ள போதிலும், அந்த முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளன. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | நிதிப் பிரமாணம் 880 | நிறுவனத்தின் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிறுவனங்கள் ஆரம்பம் முதல் இதுவரையிலும் ஊழிய பிணை வைப்புகள் இடம்பெற்றிருக்கவில்லை. இது தொடர்பில் செயலாளர், நீதீமன்ற அமைச்சிற்கு அறிவித்து நடவடிக்கை | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எடுப்பதாக தெரிவித்துக்கொள்கின்றேன். | |
| (v) | நிதிப் பிரமாணம் 1645(அ) | நிறுவனத்தின் சம்பவக் குறிப்பு புத்தகங்கள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | வாகன சம்பவக் குறிப்பு புத்தகங்களில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக் கொள்கின்றேன். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1982 இன் 43 ஆம் இலக்க முத்திரை வரி அதிகாரச்சட்டம் | ரூபா 25,000 இனை விஞ்சிய கொடுப்பனவுகளுக்காக ரூபா 25 ஆன முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும் 2021 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் 09 சந்தர்ப்பங்களில் ரூபா 1,001,206 ஆன கொடுப்பனவுகளுக்காக மேற்படி ஏற்பாடுகளுக்கு புறம்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | நடைமுறைக்கு சாத்தியமான விடயங்களை கருத்திற்கொள்ளும் போது வழங்கநர்களிடமிருந்து இவ்வாறான முத்திரை / முத்திரைக் கட்டணங்களை பெற்றுக்கொள்ளல் சிரமமான பணியாகியுள்ளது. | 1982 இன் 43 ஆம் இலக்க முத்திரை வரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 6,720,314 ஆன மிகையொன்றானதுடன் அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் மிகை ரூபா 7,066,939 ஆகும். அதன் பிரகாரம் நிதி பெறுபேறுகளில் ரூபா 346,625 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பதவிகளுக்குரிய சம்பள படிமுறைகளில் ஆரம்ப சம்பள படிமுறைக்கு மேலான சம்பள படிமுறைகளில் தாபித்து சம்பளம் செலுத்திய | இது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த வழக்கின் பணிகள் முன்னெடுக்கப்பட்டவாறு | கூடுதலாக செலுத்தப்பட்டிருந்த சம்பளம் மற்றும் அறவிடப்பட வேண்டிய முற்பணங்களை துரிதமாக அறவிட |

| | | |
|---|---|---|
| காரணத்தால் ஓய்வு பெற்றுச்சொன்ற உத்தியோகத்தருக்கு கூடுதலாக செலுத்தப்பட்டிருந்த பணம் மற்றும் செலுத்தப்பட்டிருந்த முற்பணங்களின் தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய ரூபா 215,719 கூட்டுத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளன. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 பெறுகைகள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புதிதாக நியமிக்கப்பட்ட நீதிபதிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 14 கூடாரங்களை புனரமைக்கும் பணிக்காக ரூபா 543,763 ஆன ஒப்பந்தங்களை கையளிப்பதற்கு 03 நிறுவனங்களிலிருந்து கூறுவிலை கோரப்பட்டதாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்ததாரர்களுக்கு விலைக்கேள்வி கோரும் பதிவேடு அனுப்பி வைக்கப்பட்டதாக அல்லது ஒப்பந்ததார்களால் விலைக்கேள்வி சமர்ப்பிக்கப்பட்டமைக்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மேலும் 14 நீதிபதிகளுக்காக உத்தியோகபூர்வ அறைகள் 04 வாரம் எனும் குறுகிய காலப்பகுதியினுள் ஒழுங்கமைக்க வேண்டியதுடன், விலைக்கேள்வி கோரி பொதுவான நடைமுறைகளை மேற்கொள்ள முடியாமையால் முகாமைத்துவ சபையிலும் அறிவுரைகளின் பிரகாரம் துரிதமாக விலைக்கேள்வி கோரி நீதிமன்றங்கள் அமைச்சின் செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரத்தினை பெற்று பணியை மிகவும் குறுகிய காலப்பகுதியினுள் தீர்ப்பனவு செய்து கௌரவ நீதிபதிகளுக்கு கையளிக்கப்பட்டது. மேலும், அவற்றுக்கிடையே உரிய விலைக்கேள்வி நடைமுறையின் பிரகாரம் DPC இற்கு சமர்ப்பித்து மேவுகை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |